International Journal for Multidisciplinary Research (IJFMR)

E-ISSN: 2582-2160 ● Website: www.ijfmr.com ● Email: editor@ijfmr.com

# நற்றிணையில் இயற்கை

முனைவர்அ.தெய்வவள்ளி

உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஸ்ரீமதி இந்திராகாந்தி கல்லூரி, திருச்சிராப்பள்ளி – 02.

**ஆய்வுச்சுருக்கம்**

சங்க இலக்கியத்தின் எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாக விளங்குவது நற்றிணை. நானூறு அகப்பாடல்களைக் கொண்ட இந்நூல், சங்ககாலத் தமிழரின் காதல் வாழ்க்கை, பண்பாடு, சமூக உறவுகள் மற்றும் இயற்கைச் சூழல் ஆகியவற்றை நுட்பமாகப் பதிவு செய்கிறது. நற்றிணைப் பாடல்களில் இயற்கை என்பது வெறும் பின்னணிக் காட்சியாக அமையாமல், மனித உணர்வுகளோடு ஒன்றிணைந்த உயிர்ப்புடைய கூறாக விளங்குகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனும் ஐந்திணைகளின் வழியாக மலை, காடு, வயல், கடல், வறண்ட நிலம் ஆகிய இயற்கைச் சூழல்கள் சித்தரிக்கப்படுகின்றன.

மலர்கள், மரங்கள், பறவைகள், விலங்குகள், மழை, காற்று, அருவி, கடல், ஆறு போன்ற இயற்கைக் கூறுகள் தலைவன், தலைவி, தோழி ஆகியோரின் உணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

**திறவுச்சொற்கள்** நற்றிணை, இயற்கை, ஐந்திணை, சூழலியல், மனித வாழ்வியல், அகப்பொருள்.

**முன்னுரை**

தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்க இலக்கியம் தனிச்சிறப்புடையது. சங்கப் புலவர்கள் இயற்கையையும் மனித வாழ்க்கையையும் தனித்தனியாகப் பார்க்கவில்லை. மனிதனின் உணர்வுகள், தொழில், வாழ்வியல், பண்பாடு ஆகிய அனைத்தும் இயற்கைச் சூழலோடு இணைந்தே வெளிப்படுத்தப்பட்டன. அக இலக்கிய மரபில் இயற்கைக்கு மிக முக்கியமான இடம் உண்டு. காதல் வாழ்க்கையின் பல்வேறு நிலைகளை விளக்குவதற்காக இயற்கைச் சூழல்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மரபின் சிறப்பை நற்றிணைப் பாடல்களில் தெளிவாகக் காணலாம்.

**நற்றிணையும் இயற்கையும்**

நற்றிணை முழுவதும் இயற்கைக் காட்சிகளால் நிறைந்த அகப்பாடல்களைக் கொண்டது. ஒவ்வொரு திணைக்கும் உரிய நிலம், பொழுது, தெய்வம், மக்கள், தொழில், பூ, மரம், விலங்கு, பறவை போன்றவை பாடல்களில் இடம்பெறுகின்றன. இயற்கை இங்கு மூன்று முக்கிய நிலைகளில் செயல்படுகிறது: நிலப்பின்னணியாக மனித உணர்வுகளின் வெளிப்பாடாக குறியீடாக இதனால் நற்றிணையின் இயற்கை வெறும் அழகியல் நோக்கத்தைக் கொண்டதல்ல அது வாழ்வியல் மற்றும் உணர்வியல் சார்ந்ததாகவும் விளங்குகிறது

**நின்ற சொல்லர் நீடுதோறு இனியர்**
**என்றும் என் தோள் பிரிபு அறியலரே**

**நற்றிணைப் பாடல் -1**

இப்பாடலில் தலைவன் தலைவியிடம் கொண்ட உறுதியான காதல், தலைவியின் உள்ளத்தில் ஏற்படுத்தும் உணர்வுகளுடன் இணைத்துக் கூறப்படுகிறது. இயற்கைச் சூழலும் அக உணர்வும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தப்படுவது நற்றிணையின் தனிச்சிறப்பாகும்.

**ஐந்திணையும் இயற்கையும்**

நற்றிணைப் பாடல்களில் ஐந்திணை மரபு சிறப்பாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**குறிஞ்சித் திணை**

குறிஞ்சி மலை மற்றும் மலை சார்ந்த பகுதிகளைக் குறிக்கிறது. மலை, அருவி, காந்தள், குறிஞ்சி மலர், யானை, மயில் போன்ற இயற்கைக் கூறுகள் இத்திணையில் இடம்பெறுகின்றன. குறிஞ்சி திணையின் உரிப்பொருள் புணர்தல். தலைவன் தலைவியைச் சந்திக்கும் சூழலை மலைநிலத்தின் இயற்கைக் காட்சிகள் அழகுபடுத்துகின்றன.

**முல்லைத் திணை**

காடு மற்றும் மேய்ச்சல் நிலம் முல்லை எனப்படுகிறது. முல்லை மலர், காடு, மான், ஆயர்கள், கால்நடைகள் போன்றவை இந்நிலத்தின் இயற்கைச் சூழலை வெளிப்படுத்துகின்றன. முல்லையின் உரிப்பொருள் இருத்தல். தலைவனின் வருகைக்காகத் தலைவி பொறுமையுடன் காத்திருக்கும் நிலை, மாலைப் பொழுதின் அமைதியோடு இணைக்கப்படுகிறது.

**மருதத் திணை**

வயல், ஆறு, குளம், ஊர் போன்ற வளமான நிலப்பகுதி மருதம் ஆகும். நெல் வயல்கள், நீர்நிலைகள், மருத மரங்கள், உழவர்கள், எருமைகள் போன்றவை இங்கு இடம்பெறுகின்றன. மருதத்தின் உரிப்பொருள் ஊடல். வேளாண்மை சார்ந்த சமூக வாழ்வும் காதல் உறவுகளும் ஒன்றோடு ஒன்று இணைந்து காணப்படுகின்றன.

**நெய்தல் திணை**

கடலும் கடல் சார்ந்த பகுதிகளும் நெய்தல் எனப்படும். கடல், அலை, மணற்கரை, மீன்கள், கடற்பறவைகள், படகுகள் போன்றவை நெய்தல் நிலத்தின் இயற்கைக் கூறுகளாக அமைகின்றன. நெய்தலின் உரிப்பொருள் இரங்கல். தலைவனின் பிரிவால் தலைவி அடையும் வருத்தம் கடலின் அலைகளோடு ஒப்புமைப்படுத்தப்படுகிறது.

**பாலைத் திணை**

பாலை என்பது தனியான நிலம் மட்டுமன்று. குறிஞ்சி அல்லது முல்லை நிலம் வறட்சியால் மாறிய நிலையாகவும் கருதப்படுகிறது. வெப்பம், வறட்சி, நீரின்மை, பயணப்பாதை, கொடிய விலங்குகள் போன்றவை பாலைச் சூழலை உருவாக்குகின்றன. பாலையின் உரிப்பொருள் பிரிதல். தலைவனின் பிரிவினால் தலைவி அடையும் துயரத்தை வறண்ட நிலத்தின் கடுமை உணர்த்துகிறது.

**இயற்கையும் மனித உணர்வுகளும்**

நற்றிணையின் முக்கியமான சிறப்பு இயற்கையையும் மனித உணர்வுகளையும் ஒன்றிணைத்துக் காட்டுவதாகும். தலைவியின் மகிழ்ச்சி மலரின் மலர்ச்சியோடும் துயரம் வாடிய மலரோடும், பிரிவு வறண்ட நிலத்தோடும், காத்திருத்தல் அமைதியான காட்டு மாலைப் பொழுதோடும் தொடர்புபடுத்தப்படுகிறது. இதனால் இயற்கை மனிதனின் உணர்வுகளை பிரதிபலிக்கும் உணர்வுக் கண்ணாடியாக செயல்படுகிறது.

**பல்கதிர் மண்டிலம் பகல்செய்து ஆற்றி**
**சேய்உயர் பெருவரைச் சென்றுஅவன் மறையப்**
**பறவை பார்ப்புவயின் அடையப் புறவில்**
**மாஎருத்து இரலை மடப்பிணை தழுவ**
**முல்லை முகைவாய் திறப்ப**

**நற்றிணைப் பாடல் - 69**

மாலைப்பொழுது இயற்கைக் காட்சிகளின் வழியாக அழகாகச் சித்தரிக்கப்படுகிறது. சூரியன் மறைகிறது.பறவைகள் தம் கூடுகளுக்குத் திரும்புகின்றன. ஆண்மான் தன் பெண் மானைத் தழுவுகிறது.முல்லை மலர் மலர்கிறது. ஆனால் தலைவனின் வருகையை எதிர்பார்த்திருக்கும் தலைவிக்கு இவ்வனைத்து இயற்கைக் காட்சிகளும் பிரிவுத் துயரத்தை அதிகரிக்கின்றன. மேலும்,

**செவ்வீ ஞாழற் கருங்கோட்டு இருஞ்சினைத்**
**தனிப்பார்ப்பு உள்ளிய தண்பறை நாரை**
**மணிப்பூ நெய்தல் மாக்கழி நிவப்ப**
**இனிப்புலம் பின்றே கானலும் நளிகடல்**
**திரைச்சுரம் உழந்த திண்திமில் விளக்கில்**

**அகநானூற்றுப் பாடல் - 240**

இப்பாடலில் ஞாழல், நாரை, நெய்தல் மலர், கடற்கழி, கடல் அலை, மீன்கள், புன்னை, செருந்தி போன்ற இயற்கைக் கூறுகள் இடம்பெறுகின்றன.

**நற்றிணையில் மலர்களும் தாவரங்களும்**

நற்றிணையில் பல்வேறு மலர்களும் தாவரங்களும் இடம்பெறுகின்றன. குறிஞ்சி, முல்லை, நெய்தல், குவளை, தாமரை, மருதம் போன்ற இயற்கை அழகியல் நோக்கில் மட்டுமல்லாமல், குறிப்பிட்ட நிலத்தின் அடையாளங்களாகவும் பயன்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட மலர் இடம்பெறுவதன் மூலம் அந்தப் பாடல் எந்தத் திணையைச் சார்ந்தது என்பதை அறிய முடிகிறது. இதன் மூலம் சங்கத் தமிழரின் தாவர அறிவும் இயற்கை பற்றிய நுண்ணுணர்வும் வெளிப்படுகின்றன.

**கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி**
**காமம் செப்பாது கண்டது மொழிமோ**
**பயிலியது கெழீஇய நட்பின் மயிலியற்**
**செறியெயிற்று அரிவை கூந்தலின்**
**நறியவும் உளவோ நீ அறியும் பூவே**

**குறுந்தொகைப் பாடல் - 2**

இப்பாடலில் பூவின் மணம் இயற்கை அழகையும் பெண்ணின் கூந்தல் மணத்தையும் ஒப்பிடுவதற்குப் பயன்படுத்தப்படுகிறது. எனவே, தாவரம் வெறும் இயற்கைக் கூறாக இல்லாமல்

அழகியல் மற்றும் உணர்வியல் குறியீடாகவும் செயல்படுகிறது. கொன்றை மலர்தல் பருவநிலையின் வருகையை உணர்த்தும் இயற்கை அடையாளமாகக் காட்டப்படுகிறது.

**காசின் அன்ன போதீன் கொன்றை**
**குறுந்தொடு அலம்வரும் பெருந்தண் காலையும்**
**கார் அன்று என்றியாயின்**

**குறுந்தொகைப் பாடல் 148**

கார்காலத்தின் அறிகுறி என்ற இயற்கை அவதானிப்பு வெளிப்படுகிறது. இது சங்கத் தமிழர்கள் தாவரங்களின் பூக்கும் காலத்தையும் பருவநிலையையும் காட்டுகின்றன.

**நற்றிணையில் பறவைகளும் விலங்குகளும்**

நற்றிணைப் பாடல்களில் பறவைகள் மற்றும் விலங்குகளுக்கும் முக்கிய இடம் உள்ளது. மயில், கிளி, அன்னம், நாரை போன்ற பறவைகளும்; யானை, மான், புலி, எருமை போன்ற விலங்குகளும் பல்வேறு சூழல்களில் சித்திரிக்கப்படுகின்றன. இவை இயற்கைக் காட்சியை உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், மனித உணர்வுகளுக்கும் குறியீடுகளாக அமைகின்றன. பறவைகளின் இணைவு காதலர்களின் இணைவையும், அவற்றின் பிரிவு தலைவன்,தலைவியின் பிரிவையும் நினைவூட்டும் வகையில் உள்ளது என்பதைப் பாடல்,

**மனைஉறை புறவின் செங்கால் பேடை**
**காமர் துணையொடு சேவல் சேர**
**புலம்புஇன்று எழுதரும் புன்கண் மாலை**
**தனியே இருத்தல் ஆற்றேன்**

**நற்றிணைப் பாடல் 162**

மாலைப்பொழுதில் வீட்டைச் சார்ந்த புறாக்களின் பெடையும் அதன் துணையான சேவலும் ஒன்றாகச் சேர்கின்றன. ஆனால் தலைவி மட்டும் தலைவனைப் பிரிந்து தனிமையில் வருந்தும் நிலையினை அறிய முடிகிறது.

**நீர்நிலைகளும் இயற்கையும்**

நற்றிணையில் ஆறு, அருவி, குளம், கடல் போன்ற நீர்நிலைகள் குறிப்பிடப்படுகின்றன. நீர் தமிழரின் வாழ்வில் எவ்வளவு முக்கியமானதாக இருந்தது என்பதையும் இப்பாடல்கள் உணர்த்துகின்றன. குறிஞ்சியில் அருவியும், மருதத்தில் ஆறும் குளமும், நெய்தலில் கடலும்

இயற்கையின் வெவ்வேறு வடிவங்களை வெளிப்படுத்துகின்றன. இதன் மூலம் நீர் , நிலம், மனித வாழ்க்கை ஆகியவற்றின் நெருங்கிய தொடர்பினை அறிய முடிகிறது.

**அருவி ஆர்ப்ப மலை முழைஞ் சிலம்ப**
**நற்றிணைப்பாடல் - 34**

இங்கு அருவியின் ஆரவாரம் மலைநிலத்தின் இயற்கைச் சூழலை உயிர்ப்புடன் காட்டுகிறது. அருவி மலைப் பகுதியின் நீர்வளத்தையும், அந்தச் சூழலோடு மனித வாழ்வு கொண்டிருந்த தொடர்பையும் உணர்த்துகிறது.

**வசையில் புகழ் வயங்கு வெண்மீன்**
**திசை திரிந்து தெற்கு ஏகினும்**
**தன் பாடிய தளி உணவின்**
**புள் தேம்பப் புயல் மாறி**
**வான் பொய்ப்பினும் தான் பொய்யா**
**மலைத் தலைஇய கடல் காவிரி**
**பட்டினப்பாலை – 1-6**

இங்கு காவிரி நீர்வளம், மழை, வேளாண்மை ஆகியவற்றுடன் தொடர்புபடுத்தப்படுகிறது. இதன் மூலம் நீர் என்பது இயற்கைக் கூறாக மட்டுமல்லாமல், மக்களின் வேளாண்மை மற்றும் வாழ்வாதாரத்தின் அடிப்படையாகவும் இருந்தது என்பதை அறியலாம்.

**இயற்கையும் தொழில் வாழ்வும்**

நற்றிணையில் இயற்கை மனிதர்களின் தொழில்களோடும் இணைந்துள்ளது.

குறிஞ்சி – வேட்டை, தேன் சேகரித்தல்

முல்லை – கால்நடை மேய்த்தல்

மருதம் – உழவு

நெய்தல் – மீன்பிடித்தல், கடல்வாணிகம்

பாலை – பயணம், வழிப்பயணம்

இவ்வாறு நிலத்தின் இயல்புக்கு ஏற்ப மக்களின் தொழிலும் வாழ்க்கை முறையும் அமைந்திருந்ததை நற்றிணை எடுத்துரைக்கிறது.

**இயற்கையும் பெண்ணின் உணர்வும்**

நற்றிணையின் அகப்பாடல்களில் தலைவியின் உணர்வுகள் இயற்கையோடு நெருக்கமாக இணைக்கப்படுகின்றன. தலைவியின் காத்திருப்பு, ஏக்கம், மகிழ்ச்சி, வருத்தம், பிரிவு போன்ற

உணர்வுகளை இயற்கைக் காட்சிகள் வெளிப்படுத்துகின்றன.

தலைவி இயற்கையை வெறுமனே பார்த்துக் கொண்டிருப்பவளாக இல்லாமல், இயற்கையோடு உரையாடும் மனநிலையுடையவளாகவும் சித்தரிக்கப்படுகிறாள். இதனால் நற்றிணையில் இயற்கை ஒரு உணர்வியல் ஊடகமாக விளங்குகிறது.

**தொகுப்புரை**

- மனிதன் இயற்கையின் ஒரு பகுதியாகவே கருதப்படுகிறான். நிலம், நீர், மரம், விலங்கு, பறவை, மனிதன் ஆகியவை ஒன்றோடு ஒன்று தொடர்புடைய கூறுகளாகக் காட்டப்படுகின்றன.
- சங்ககாலத் தமிழரின் இயற்கை பற்றிய நுண்ணுணர்வையும் இயற்கையுடன் இணைந்த வாழ்வியலையும் வெளிப்படுத்துகிறது.
- நற்றிணையில் இயற்கை என்பது மனித வாழ்க்கையின் ஓர் அங்கமாகவும், காதல் உணர்வுகளின் வெளிப்பாட்டுக் கருவியாகவும், திணை அடையாளமாகவும், வாழ்வியல் பதிவாகவும் விளங்குகிறது.
- ஐந்திணை அமைப்பின் வழியாக மலை, காடு, வயல், கடல், வறண்ட நிலம் ஆகியவற்றின் தன்மைகளை நற்றிணைப் புலவர்கள் நுட்பமாகப் பதிவு செய்துள்ளனர்.
- மலர்கள், மரங்கள், பறவைகள், விலங்குகள், நீர்நிலைகள், பருவநிலை போன்ற இயற்கைக் கூறுகள் மனித உணர்வுகளோடு இணைக்கப்பட்டுள்ளன.
- நற்றிணை காட்டும் இயற்கை என்பது மானுடத்தின் உளவியலோடு இரண்டறக் கலந்த ஒன்றாகும். சங்கத் தமிழர்கள் இயற்கையை நேசித்ததுடன், அதனைப் பேணிக் காக்கும் சூழலியல் அறத்தையும் நற்றிணைப் பாடல்கள் நமக்கு உணர்த்துகின்றன.

**துணைநின்ற நூல்கள்**

1. தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர்சு.ஆனந்தன் கண்மணி பதிப்பகம் திருச்சிராப்பள்ளி
2. நற்றிணை – மூலமும் உரையும், உ.வே.சாமிநாதையர், உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை
3. பட்டினப்பாலை – மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை
4. குறுந்தொகை – மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை
5. அகநானூறு – மூலமும் உரையும், உ.வே. சாமிநாதையர், உ.வே. சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை.